**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**முன்னிலை :திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.426/2024**

திருநெல்வேலி டவுண், பகவத்சிங் தெரு, கதவு எண்.15A/1 ல் குடியிருந்து வந்து தற்பொழுது திருநெல்வேலி டவுண், பகவத்சிங் தெரு, கதவு எண்.9–ல் குடியிருந்து வரும் (லேட்) திரு.முருகன் அவர்களின் மனைவி, இந்து, வயது சுமார் 65 உள்ள திருமதி.முத்து.

... வாதி

–எதிர்–

1. திருநெல்வேலி டவுண், பகவத்சிங் தெரு, கதவு எண்.15A/1 ல் குடியிருந்து வரும் (லேட்) திரு.இசக்கிபாண்டியன் அவர்களின் மனைவி, இந்து, வயது சுமார் 62 உள்ள திருமதி.சாந்தி.

2. திருநெல்வேலி டவுண், பகவத்சிங் தெரு, கதவு எண்.15A/1 ல் குடியிருந்து வரும் (லேட்) திரு.இசக்கிபாண்டியன் அவர்களின் குமாரர், இந்து, வயது சுமார் 42 உள்ள திரு.E.ராஜகுரு

... பிரதிவாதிகள்

அ) பிராது தபசில் சொத்திலிருந்து பிரதிவாதிகளை அப்புறப்படுத்தி காலி செய்து பிராது தபசில் சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும்,

ஆ) பிரதிவாதிகள் 01.10.2023 முதல் 30.09.2024 வரை மொத்தம் 12 மாதங்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.2,000/– வீதம் மொத்தம் ரூ.24,000/– (ரூபாய் இருபத்தி நான்காயிரம் மட்டும்) –த்தை வாடகை பாக்கி வாதிக்கு செலுத்தும்படியும்,

இ) பிராது தாக்கல் செய்த காலம் முதல் பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்திலிருந்து காலி செய்து வாதி வசம் ஒப்படைக்கும் காலம் வரை மத்திய கால வருமானம் செலுத்தும்படியும்,

ஈ) வழக்கின் செலவுத்தொகையை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படியும் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் செய்த நாள் | 22.10.2024 |
| வழக்குமூலம் | 04.11.1994, 07.03.2011, 11.12.2017, 04.03.2022, 22.06.2022, 2022, 01.11.2022, 30.09.2023, 01.10.2023, 18.09.2024, 24.09.2024 |
| இடம் | திருநெல்வேலி, டவுணில் வைத்து உற்பத்தி |
| பிராது மதிப்பு | பரிகாரத்திற்காக ரூ.24,000 + ரூ.24,000 + ரூ.5,000 = ரூ.53,000/- |

வாதி தாவாவை அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற முத்திரை கட்டணத்திற்காகவும், அ) பரிகாரத்திற்காக ரூ.24,000/- ஆக மதிப்பீடு செய்து அதற்கான நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டப்பிரிவு 43(2)-ன் படி ரூ.720/-ம், ஆ) பரிகாரத்திற்காக ரூ.24,000/-ஆக மதிப்பீடு செய்து சட்டப்பிரிவு 22ன் படி ரூ.720/-ம், இ) பரிகாரத்திற்காக ரூ.5,000/-ஆக மதிப்பீடு செய்து சட்டப்பிரிவு 44(1)ன் படி ரூ.150/-ம், ஆக மொத்தம் ரூ.1590/- நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 09.09.2025 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. நெளசாத் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.B.கமலநாதன் அவர்கள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்த நிலையில் வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் எந்த அறிவுறுத்தலும் இல்லை என்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் அவர்களை பொறுத்து ஒருதலைபட்சமாக்கியும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் கட்டளையிட்டு பிறப்பிக்கும்.

## தீர்ப்பாணை

1) வாதியின் வழக்கு பகுதியாக அனுமதித்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2) பிராது தபசில் சொத்திலிருந்து பிரதிவாதிகளை அப்புறப்படுத்தி காலி செய்து பிராது தபசில் சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க வேண்டுமென்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3) பிரதிவாதிகள் ரூ.24,000/– வாடகை பாக்கி செலுத்தக்கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

4) வாதி கோரிய மத்திய கால வருமானம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

5) வாதிக்கு பிரதிவாதிகள் செலவுத்தொகையாக ரூ.6,600/– செலுத்த ஆணையிடப்படுகிறது.

## செலவு விபர பட்டியல்

| வ. எண். | வாதி தரப்பு | | | பிரதிவாதிகள் தரப்பு | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | பை | ரூ. | பை |
| 1. | பிராதில் வில்லை | 1590 | 00 | 00 | 00 |
| 2. | வக்காலத்து வில்லை | 10 | 00 | 00 | 00 |
| 7. | வழக்கறிஞர் கட்டணம் இளநிலை | 5000 | 00 | 00 | 00 |
| | மொத்தம் | 6600 | 00 | 00 | 00 |

## தபசில் சொத்து விபரம்

திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி –2 இணை சார்பதிவகம் திருநெல்வேலி மாநகராட்சி 51–வது வார்டு, T.S.Ward–7, Block–10, T.S.No.1986–ன் பாகம் திருநெல்வேலி டவுண், வேட்டைக்காரர் தெரு என்ற பகவத்சிங் தெரு, மேல்சிகில் உள்ள மனைக்கு எல்கை:–

வடக்கு – T.S.No.1986 பாகம் தென்வடல் 3–1/4 அடி அகலம் உள்ள உலகநாதன் சேர்வை சொந்த முடுக்கு

தெற்கு – T.S.No.1986 பாகம் கதவு எண்.15A உள்ள மனை வீடு பொதுச்சுவர் கனம்பாதி

மேற்கு – T.S.No.1986 பாகம் உலகநாதன் சேர்வை மனை வீடு சுவர் கனம் பாதி

கிழக்கு – T.S.No.1965 பகவத்சிங் தெரு

இதற்குள்பட்ட மேல்புரம் பொதுச்சுவர் உள்படவும், கீழ்புரம் சொந்தச்சுவர் உள்படவும், கிழமேல் அடி 27–3/4 தென்புரம் பொதுச்சுவர் கனம்பாதி உள்பட தென்வடல் அடி 14 ஆக மொத்தம் 388.50 சதுர அடி (36.09 ச.மீ) உள்ள மனை பூராவும் அதில் கட்டப்பட்டுள்ள முனிசிபல் கார்பரேசன் கதவு எண்.15A–ன் வடபாகமாக இருந்து தற்போது முனிசிபல் கார்ப்பரேசன் கதவு எண்.15A1 என்று ஏற்பட்டுள்ள ஓடு போட்ட வீடும் அதன் மேல் கோப்பு வகையறா சமஸ்தங்களும் மற்றும் வீட்டில் உள்ள நதிநீர் இணைப்பு, மின் இணைப்பு மற்றும் அதன் டெபாசிட்கள் உள்பட மேற்படி மனை வீட்டிற்குள்ள சகல மாமூல் பாத்தியங்கள் உள்பட விபரம் சரி.

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.11.16 12:57:12 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி
அ.வ.எண்.426/2024
நேரிய தீர்ப்புரை
06.10.2025